# ஹிஜ்ரத்


முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் மக்காவில் இஸ்லாத்தைப் போதித்துக் கொண்டிருந்தார்கள். அவ்வேளை அங்கு வாழ்ந்த குறைசிக் காபிர்கள் சிலர் முஹம்மத் நபி(ஸல்) அவர்களை அமைதியாக இருக்க விடவில்லை. அக்கால கட்டத்தில் மதீனாவில் வாழ்ந்தமக்கள் இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் முஹம்மத் நபி (ஸல்) அவர்களை மதீனாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார்கள். முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் மக்காவில் வாழ்ந்த ஸஹாபாக்களை மதீனாவுக்கு அனுப்பி வைத்தார்கள். ஆனால் அல்லாஹ்வின் கட்டளை வரும்வரை முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் காத்திருந்தார்கள்.

முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து வெளியேறப் போகிறார்கள் என்ற செய்தி குறைசியர்களுக்கு எட்டியது. குறைசியர்கள் முஹம்மத் நபி(ஸல்) அவர்களை வெளியேற விடாமல் தடுத்துக் கொலை செய்யத் திட்டமிட்டார்கள். ஒரு நாளிரவு முஹம்மத் நபி(ஸல்) அவர்களின் வீட்டைக் குறைசி வாலிபர்கள் முற்றுகை இட்டார்கள். இவ்வேளையில் அல்லாஹ்வின் கட்டளைக் கேற்ப முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் மதீனா செல்ல ஆயத்தமானார்கள்.

முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் தமது படுக்கையில் அலி(றழி) அவர்களை உறங்க வைத்தார்கள். தம்மிடம் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த பொருள்களை

உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு அலி(றழி)அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள். பின்னர் இரவோடிரவாக அபூபக்ர் (றழி) அவர்களின் வீட்டுக்குச் சென்றார்கள். அவர்களையும் அழைத்துக் கொண்டு, விடிவதற்கு முன் ஸவ்ர் குகையை அடைந்தார்கள். அங்கு மூன்று நாட்கள் தங்கினார்கள்.

அப்போது அவர்களுக்கு அபூபக்ர்(றழி) அவர்களின் குடும்பத்தவர்கள் இரகசியமாக உதவிக் கொண்டிருந்தார்கள். குறைசியர்கள் முஹம்மத் நபி(ஸல்) அவர்களைத் தேடி அலைந்தார்கள். ஸவ்ர் குகைப்பக்கமாகவும் வந்தார்கள். எனினும் அவர்களைக் கண்டு கொள்ள முடியாதவாறு அல்லாஹ் பாதுகாத்தான். குகை



வாசலில் சிலந்தியை வலை பின்ன வைத்தான். புறாவைக் கூடு கட்டி முட்டையிட வைத்தான். மரத்தை வளரச் செய்தான். இதனால் குறைசியர்கள் குகைக்குள் நுழையாமல் திரும்பி விட்டார்கள்.

நான்காம் நாள் முஹம்மத் நபி(ஸல்) அவர்களும் அபூபக்ர்(றழி) அவர்களும் ஸவ்ர் குகையிலிருந்து புறப்பட்டார்கள். கைவிடப்பட்ட ஒரு பழைய பாதை வழியாகப் பயணத்தை ஆரம்பித்தார்கள். இதைக் கேள்விப்பட்ட ஒருவர் முஹம்மத் நபி(ஸல்) அவர்களைக் கொலை செய்ய ஓடோடி வந்தார். அதன் மூலம் பரிசு பெற விரும்பினார். ஆனால், வந்தவர் மனம் மாறித் திரும்பிச் சென்று விட்டார்.

ஒரு வார காலப் பயணத்தின் பின் முஹம்மத் நபி(ஸல்) அவர்களும் அபூபக்ர் (றழி) அவர்களும் மதீனாவை அடைந்தார்கள். மதீனா மக்கள்,

"தல அல் பத்று அலைனா
மின் ஸனிய்யாத்தில் வதாஈ"

என்ற கஸீதாவைப் பாடி வரவேற்றார்கள்.

அந்தக் கஸீதாவைத் தமிழில் இவ்வாறு பாடலாம்.

மக்கமெனும் திக்கிருந்து
மதி பிறந்து வந்தத்தம்மா
ஹக்கன் இறை தனைத் துதித்தல்
கடமை எமக்கானதம்மா.
இறை கொடையாய் எழுந்தவரே
ஏற்கும் நெறி தாங்கி வந்தீர்
குறைவடைந்து குலைந்த பின் யாம்
கொழிக்கு புகழ் கொள்கை பெற்றோம்.

முஹம்மத் நபி(ஸல்) அவர்களின் இந்தப் பயணமே ஹிஜ்ரத் எனப்படுகிறது. ஹிஜ்ரத் எமக்குப் பல படிப்பினைகளை ஊட்டுகின்றது. அதனை நாமும் அறிந்து பின்பற்றுவோம்.

**அல்லாஹ்வை நம்புவோர் கைவிடப்படார்.**

## பயிற்சி

**'அ' பகுதியிலுள்ள தொடருக்குப் பொருத்தமான தொடரை, 'ஆ' பகுதியிலிருந்து தெரிந்தெடுத்து 'ஆ' பகுதிக்கு உரிய இலக்கத்தை அடைப்புக்குள் இடுங்கள்.**

### பகுதி - அ

1. குறைஷிக் கொடியவர்கள் [ ]
2. மதீனா மக்கள் [ ]
3. குறைஷி வாலிபர்கள் [ ]
4. முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் [ ]
5. ஸவ்ர் குகை வாயிலில் [ ]
6. ஹிஜ்ரத் என்பது [ ]
7. ஹஸ்ரத் அலி (றழி) அவர்கள். [ ]
8. முஹம்மத் நபி(ஸல்) அவர்களைக் கொலை செய்ய வந்தவர் [ ]

## பகுதி - ஆ

1. முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்குச் சென்ற பயணமாகும்.
2. மனம் மாறி திரும்பிச் சென்றார்.
3. சிலந்தி வலை பின்னி முஹம்மத் நபி(ஸல்) அவர் களைக் காப்பாற்றியது.
4. அபூபக்ர்(றழி) அவர்களுடன் ஹிஜ்ரத் சென்றார்கள்.
5. முஹம்மத் நபி(ஸல்) அவர்களை மதீனாவுக்கு வருமாறு அழைத்தார்கள்.
6. முஹம்மத் நபி(ஸல்) அவர்களை மக்காவில் அமைதி யாக வாழ விடவில்லை.
7. முஹம்மத் நபி(ஸல்) அவர்களின் வீட்டை முற்றுகை யிட்டார்கள்.
8. ஹிஜ்ரத் செய்த இரவில் முஹம்மத் நபி(ஸல்) அவர்களின் படுக்கையில் உறங்கினார்கள்.